

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.8.2025) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 104.24 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள். கொட்டாம்பட்டி புதிய பேருந்து நிலையம், 66 புதிய பள்ளிக் கட்டடங்கள், 4 புதிய நூலகக் கட்டடங்கள், 49 பொது விநியோகக் கடைகள், 26 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள், 25 உணவு தானிய சேமிப்பு கிடங்குகள், 45 ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடங்கள், 16 கிராம செயலகக் கட்டடங்கள், 84 புதிய அங்கன்வாடி மையக் கட்டடங்கள், 3 சமூகநலக் கூடங்கள், மதுக்கூரில் நேரடி நெல் விற்பனை மையக் கட்டடம், 3 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கட்டடங்கள், 2 மகளிர் சுய உதவிக் குழு கட்டடங்கள் மற்றும் 2 பாலங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் பா. பொன்னையா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் தீர்வு

# சேலத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு!

சேலம், ஆக.24-

சேலம் மாநகராட்சி நரசோதிப்பட்டி ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மற்றும் வெள்ளக்கல்பட்டி ஊராட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்களை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

சேலம் மாநகராட்சி. சூரமங்கலம் மண்டலம் வார்டு-2, 3க்குட்பட்ட பகுதிகளுக்கு நரசோதிப்பட்டி, ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியிலும், நகர்ப்புறத்தையொட்டியுள்ள கிராம ஊராட்சி, வெள்ளக்கல்பட்டி பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு வெள்ளக்கல்பட்டி ஊராட்சி திருமண மண்டபத்திலும் நேற்று முன்தினம் (22.08. 2025) நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர்இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா. பிருந்தாதேவி, ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர், சுற்று லாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களால் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் 15.07.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. ”உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 168 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் திட்டமிடப்பட்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தீர்வுகள் காணப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள்.

சேலம் மாவட்டத்தில் 15.07.2025 முதல் 21.08.2025 வரை நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்களில் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 65,658 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதுதவிர கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிக்கை விண்ணப்பமாக மொத்தம் 75,830 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலம் வார்டு 2, 3 க்குட்பட்ட பகுதிகளுக்கு நரசோதிப்பட்டி, ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியிலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, வெள்ளக்கல்பட்டிபகுதிக்கு உட்பட்டவர்களுக்கு வெள்ளக்கல்பட்டி ஊராட்சி திருமண மண்டபத்திலும், இடங்கணசாலை வார்டு 3, 4 க்குட்பட்ட பகுதிகளுக்கு பெருமாகவுண்டனூர் வார்டு - 4 சிவகாமி சுந்தரம் மஹாலிலும், பனமரத்துப்பட்டி பேரூராட்சி வார்டு 1, 2, 3, 4, 5, 6, 7 க்குட்பட்ட பகுதிகளுக்கு ஒண்டிக்கடை வார்டு 13 சமுதாய கூடத்திலும், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பகுதிகளுக்கு 4 ரோடு, குட்டபட்டி ஜே. எஸ்.டி மஹாலிலும், அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பகுதிகளுக்கு சின்ன கவுண்டபுரம் செந்தில் மஹாலிலும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெற்றது.

அந்தவகையில் சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் வார்டு 2, 3 க்குட்பட்ட பகுதிகளுக்கு நரசோதிப்பட்டி, ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு முகாமில் வழங்கப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 10 நபர்களுக்கு சொத்து வரி பெயர் மாற்றத்திற்கான ஆணை வழங்கப்பட்டது.

அதேபோன்று, ஓமலூர் வட்டம், வெள்ளக்கல் பட்டி பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு வெள்ளக்கல் பட்டி ஊராட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை ஆய்வு மேற்கொண்டு முகாமில் வழங்கப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ.அபிநயா, சூரமங்கலம் உதவி ஆணையர் திருமதி லட்சுமி, ஓமலூர் வட்டாட்சியர் ரவிக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் பங்கேற்றனர்.

### பெரம்பலூர் மாவட்டம்

# துங்கபுரம் ஊராட்சியில் ‘ உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்!

பெரம்பலூர்,ஆக.24-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, பெரம்பலூர் மாவட்டத்தில் நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் 15.07.2025 அன்று முதல் சிறப்புடன் நடைபெற்று வருகிறது. இம்முகாமில் பெறப்படும் அனைத்து மனுக்களுக்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. ஊரகப் பகுதிகளுக்கான முகாம் குன்னம் வட்டத்திற்குட் பட்ட துங்கபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் வேப்பந்தட்டை வட்டத் திற்குட்பட்ட வ.களத்தூர் அரசு பெண்கள் நடுநிலைப் பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்றது.

இதில் துங்கபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பார்வையிட்டு, பொதுமக்களிடம் தேவைகள் மற்றும் கோரிக்கை தொடர்பாக கேட்டறிந்தார். பின்னர், மனுக்கள் பதிவு செய்யப் பட்டு தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப் பட்டு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருவதை போக்குவரத்து மற்றும் மின் சாரத் துறை அமைச்சர் பார்வையிட்டு, மனுக்கள் அளிக்க வந்த பொதுமக்களிடம் என்ன கோரிக்கை தொடர்பாக மனு அளிக்க வந்துள்ளீர்கள், மனுக்கள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர், அனைத்து மனுக்கள் மீதும் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், அரசு விதிமுறைகளுக்கு உட்படாமல் அளிக்கப்படும் பொதுமக்களின் மனுக்கள் தொடர்புடைய நபர்களுக்கு அதன் விவரங்களை தெரிவித்திட வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதேபோல வ.களத்தூர் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் பார்வையிட்டு, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, பொதுமக்களை நீண்ட வரிசையில் காத்திருக்க வைக்காமல் விரைவாக அனைத்து மனுக்களையும் இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்து, விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளில், மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், வட்டாட்சியர்கள் சின்னதுரை (குன்னம்), துரைராஜ் (வேப்பந்தட்டை), வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறிவழகன் (வேப்பூர்), பூங்கொடி (வேப்பந்தட்டை) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் வார்டு – 2, 3 க்குட்பட்ட பகுதிகளுக்கு நரசோதிப்பட்டி, ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியில் நேற்று முன்தினம் (22.08.2025) நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர்இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன், சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி ஆகியோர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று முன்தினம் (22.08.2025) தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடைபெறவுள்ள “தொல்காப்பியர் சுழலரங்கம்” மாநிலம் தழுவிய வெள்ளி வட்டம் நிகழ்ச்சி தொடர்பான இலச்சினையை (LOGO) வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன், (ஓய்வு) ஆகியோர் உடனிருந்தனர்.

### பிரதமர் வேலைவாய்ப்பு உருவாக்கம் திட்டத்தில்

# பயன்பெற்ற கிராமப்புற மக்களின் எண்ணிக்கை என்ன?

## ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. ஒன்றிய அரசுக்கு கேள்வி!



புதுடெல்லி, ஆக.24-

பிரதமர் வேலைவாய்ப்பு உருவாக்கம் திட்டத்தில் எவ்வளவு கிராமப்புற மக்கள் பயன்பெற்றுள்ளனர்? என்று கே.இ.பிரகாஷ் எம்.பி. எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு பொத்தாம் பொதுவான பதிலை அளித்துள்ளது என்று கே.இ. பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது:-

பிரதமர் வேலைவாய்ப்பு உருவாக்கம் திட்டமான PMEGP, கிராமப்புற மக்களுக்கு எவ்வாறு பயனளித்துள்ளது என்பதை அறிந்து கொள்ள, நாடாளுமன்றத்தில் ஒன்றிய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்திடம் கேள்வி எழுப்பினேன். ஆனால் அதற்கு ஒன்றிய அரசு அளித்த பதில்கள், வழக்கம் போல பொதுவான சில புள்ளிவிவரங்களையும், சில இணையதள முன்னெடுப்புகளையும் குறிப்பிடும் வகையில் அமைந்துள்ளது.

இது ஏமாற்றம் அளிப்பது என்பதோடு, இந்த அரசு கிராமப்புறங்களை தொடர்ந்து புறக்கணிப்பது ஏன் என்ற முக்கியக் கேள்வியையும் எழுப்புகிறது.

**பொத்தாம் பொதுவான புள்ளி விவரம்!**

PMEGP திட்டத்தின் பயனாளிகளில் 80% பேர் கிராமப்புறங்களில் உள்ளனர் என்ற தரவை மட்டும் அமைச்சர் பெருமையுடன் குறிப்பிட்டிருக்கிறார். இது உண்மையெனில் பாராட்டத்தக்கது. ஆனால், இந்த 80% என்பதை எதைக் கொண்டு அரசு கண்டறிந்தது, அவர்களுக்கு இது வரை வழங்கப்பட்டுள்ள நிதி உதவி எவ்வளவு ஆகிய தகவல்கள் இல்லை. இது பொத்தாம்பொதுவான பொறுப்பற்ற பதில் என்பதில் சந்தேகமில்லை.

ஒன்றிய அரசு குறிப்பிடும் 80% கிராமப்புறப் பயனாளிகளில், சமூக ரீதியாகப் பின்தங்கிய (SC, ST, OBC), புவியியல் ரீதியாக ஒதுக்கப்பட்ட (வடகிழக்கு, மலைப் பகுதிகள்) மக்கள் எந்தளவு பயனடைந்துள்ளனர் என்பதற்கான தகவல்களும் இல்லை.

ஒரு திட்டம் உண்மையாகவே அனைவரையும் உள்ளடக்கியதா (INCLUSIVE) என்பதை வெறும் ஒரு சதவீத எண்ணை மட்டும் கொண்டு எப்படி தீர்மானிப்பது? எனவே, இத்தகைய தரவுகள் இல்லாதது திட்டத்தின் சமமான வளர்ச்சி குறித்த பலத்த சந்தேகங்களை எழுப்புகிறது.

**இந்திய மொழிகள் குறித்து வெற்றுப் பெருமை பேசினால் மட்டும் போதுமா?**

PMEGP திட்ட விண்ணப்பங்களை 11 மொழிகளில் பெறத் தொடங்கியுள்ளதாக அமைச்சர் கூறியிருக்கிறார். ஆனால், நமது அரசியலமைப்புச் சட்டம் 22 மொழிகளை அங்கீகரிக்கப்பட்ட மொழிகளாக அறிவித்துள்ளது. 2008ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரு திட்டத்தில், கிட்டத்தட்ட 11 ஆண்டுகளாக ஆட்சி நடத்திய பிறகும், பாதி மொழிகளில் மட்டுமே விண்ணப்பிக்கும் வசதியை ஏற்படுத்தியிருப்பது, இந்திய மொழிகள் குறித்த ஒன்றிய அரசின் அக்கறையின்மையை மட்டுமே காட்டுகிறது.

**பிணையம் இல்லாத கடன்; வங்கிகள் அதை நடைமுறைப் படுத்துகின்றனவா?**

PMEGP ரூ.10 லட்சம் வரையிலான கடன்களுக்குப் பிணையம் கேட்க வேண்டாம் என வங்கிகளுக்குப் பரிந்துரைக்கப்படுவதாகக் கூறியுள்ளார். இது ஒரு நல்ல அம்சம் தான். ஆனால், இந்த பரிந்துரை உண்மையில் எத்தனை தூரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது, வங்கிகள் அதை கடைபிடிக்கிறதா, எவ்வளவு மக்கள் பயனடைந்துள்ளனர் ஆகிய விவரங்கள் இல்லை. இது போன்ற வங்கிகள் சம்பந்தப்பட்ட சலுகைகள், தீவிரமான நடைமுறைப்படுத்தலும் கண்காணிப்பும் இல்லாமல் மக்களுக்கு பயனளிக்காது. ஆனால், ஒன்றிய அரசு இது குறித்து சரியான பதில்களை அளிக்கவில்லை.

**புதுப்பிக்கப்படாத மாதிரி திட்ட அறிக்கைகள்! கிராமப்புற மக்களுக்கு இது எப்படி பயன்படும்?**

PMEGP இணையதளத்தில் ஆயிரம் மாதிரி திட்ட அறிக்கைகள் (DPR) உள்ளதாக அமைச்சர் பதிலளித்துள்ளார். ஆனால், நான் ஆய்வு செய்ததில், பெரும்பாலான திட்ட அறிக்கைகள் இன்றைய சந்தை நிலைக்கு ஏற்ப புதுப்பிக்கப் படாமல், மிகவும் தரமற்ற நிலையில் உள்ளன. கிராமப்புறத்தைச் சேர்ந்த சிறு, குறு, நடுத்தர தொழில்முனைவோருக்கு வழிகாட்ட வேண்டிய இந்த திட்ட அறிக்கைகள் இப்படி இருப்பது, அவர்களுக்கு மேலும் சிக்கல்களையே உருவாக்கும். இதை ஒன்றிய அரசு உணர்ந்துள்ளதா என்பதே தெரியவில்லை.

**புதிய போர்ட்டல் அறிமுகம்; ஆனால் செயல்பாட்டில் முன்னேற்றம் குறித்த தரவு இல்லை!**

விண்ணப்பங்களை விரைவாக முடிக்க ஒரு புதிய போர்ட்டல் உருவாக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் சொல்லியுள்ளார். ஆனால், இந்த போர்ட்டல் உண்மையிலேயே விண்ணப்பங்கள் ஏற்கப்படுவதன் கால அளவைக் குறைத்துள்ளதா என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. முன்பு எத்தனை நாட்கள் எடுத்தது, இப்போது எத்தனை நாட்கள் எடுக்கிறது ஆகிய விவரங்கள் இல்லாமல், அமைச்சர் பயன்படுத்தும் விரைவாக எனும் வார்த்தை அர்த்தமற்ற ஒன்று.

மொத்தத்தில், ஒன்றிய அரசின் பதில்கள் PMEGP திட்டம் கிராமப்புற மக்களுக்கு பயனளிக்கிறதா எனும் உண்மை நிலவரத்தை காட்டவில்லை. அதற்குப் பதிலாக, புதிய கேள்விகளையும் சந்தேகங்களையுமே எழுப்பியுள்ளது.

இந்த திட்டம் கிராமப்புறங்களில் வெற்றியடைய வேண்டுமானால், ஒன்றிய அரசு தன்னுடைய சம்பிரதாய நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு, உண்மையான அக்கறையோடு செயல்பட வேண்டும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. துணைவியார்

# திருமதி. ரேணுகாதேவி மறைவு!

## திருமதி.சோனியா காந்தி இரங்கல்!

புதுடெல்லி, ஆக. 24-

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியார் திருமதி ரேணுகாதேவி அம்மையார் அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக சென்ற 19.8.2025 அன்று சென்னையில் இயற்கை எய்தினார். இந்த துயரச் செய்தி அறிந்து காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி எம்.பி. அவர்கள் டி.ஆர்.பாலுவுக்கு தனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திருமதி.சோனியா காந்தி அம்மையார் 21.8.2025 அன்று எழுதிய கடிதத்தின் விபரம் வருமாறு:

ரேணுகாதேவி அவர்கள் ஒரு அற்புதமான மனைவியாக, பிள்ளைகளுக்குத் தாயாக தங்கள் குடும்பத்தார் அனைவராலும் பெரிதும் போற்றப் பட்டவர்; தொகுதி மக்களின் மதிப்பைப் பெற்ற அவர் மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் பரிவுடனும் கனிவுடனும் உணர்ந்தவர்.

இவற்றிலிருந்து தான் துக்கரமான இந்த நேரத்தில் நீங்கள் ஆறுதல் பெற வேண்டும். கொடுமையான இந்த இழப்பைத் தாங்கிடும் வலிமையை நீங்களும் தங்கள் குடும்பத்தாரும் பெற்றிட வேண்டும்.

இவ்வாறு திருமதி. சோனியாகாந்தி எம்.பி. தெரிவித்துள்ளார்.



திருநெல்வேலியைச் சேர்ந்த செல்லத்துரையின் மகனாகிய ஜவஹர் சுமன், கடந்த 10 ஆண்டுகளாக சவூதி அரேபியாவின் ஜுபைலில் பணிபுரிந்து வந்தார். அங்கே மின்சாரம் தாக்கியதால் துரதிருஷ்டவசமாக உயிரிழந்தார். இந்த துயரமான சம்பவத்துக்குப் பின்னர், இது தொடர்பான தகவல் NRTIA க்கு தெரிவிக்கப்பட்டது. அயலக அணி.தம்மாம் ஒருங்கிணைப்பாளரும் சிக்கந்தர் பாபு மற்றும் துணை ஒருங்கிணைப்பாளருமான குண்டு பிலால் ஆகியோர் உடனடியாக நடவடிக்கை எடுத்து, NRTIA இளைஞர் அணி செயலாளர் அஷ்ரப், பஹத் மற்றும் ஓட்டுநர் சங்க பொறுப்பாளர் முருக லிங்கம்,அப்துல் சத்தார், ஆகியோரின் ஒத்துழைப்பின் மூலம் தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகள் தாமதமின்றி நிறைவேற்றப்பட்டு, ஜவஹர் சுமனின் உடல் திருவனந்தபுரத்திற்கு அனுப்பப்பட்டது.